# மான்மின் செய்திகள்

# Manmin News

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com


## "ஜீவனுள்ள தேவனை சந்தித்தோம். இப்போது அவருடைய இராஜ்ஜியத்திற்காக கனவு கொண்டிருக்கிறோம்"

### வல்லமையான கிரியைகளை அனுபவித்த இளம் மக்கள் கனவுகளோடும் தரிசனங்களோடும் நிரம்பியுள்ளனர்




▲ சகோதரர் ஜங்டேக் லீ பிறந்து 63ஆம் நாளிலே, ஒரு பெரிய திராட்சை அவரது நுரையீரலில் சிக்கி அவரது இதயம் இரண்டு முறை நின்றுவிட்டது. ஆனால் அவர் தொலைபேசி தானியங்கி பதிலளிக்கும் முறையிலே அறிவர். லீ அவர்களது வியாதியஸ்தர்களுக்கான ஜெபத்தைப் பெற்ற பின் காப்பாற்றப்பட்டார்.




▲ மலச்சிக்கல் மற்றும் பிறவி செரிமான வியாதியினால் மரணத்தின் வாசற்படியிலே இருந்த ஏழு வயது நிரம்பிய பெண் பிள்ளைதான் சிந்தியா. ஆனால் சீயோனிலிருந்து அறிவர். லீ அவர்கள் அவளது புகைப்படத்திலே ஜெபித்ததால் அவள் சுகமாக்கப்பட்டாள். தற்போது ஒரு மருத்து மாணவியாய் இருக்கிறாள்.

பெரும்பாலான திருச்சபைகளிலே இன்று முதிய தலைமுறையினர் தான் திருச்சபை விவகாரங்களை நடத்திக் கொண்டு இருக்கின்றனர். இது சமுதாயத்தில் இளம் பெரியவர்கள் மற்றும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவு மற்றும் வளத்தின் விகிதம் குறைவு ஆகியவற்றால் காரணமாகிறது. அநேக திருச்சபைகளில் இளைஞர்களின் எண்ணிக்கை குறைந்து காணப்படுகிறது. கல்லூரி நுழைவு தேர்வு அல்லது வேலை தேடுவதில் பரபரப்பாய் இருக்கிற இளம் வாலிபர்கள் மற்றும் பள்ளி பருவ மாணவர்கள் வாழ்வின் நிஜத் தன்மையின் காரணத்தால் அப்படியே சபையை கைவிட்டு விட்டனர்.

இருப்பினும், மான்மின் மத்திய திருச்சபையில் ஞாயிறு ஆராதனைகள், வெள்ளி முழு இரவு ஆராதனைகளில் (இரவு 11 முதல் மறுநாள் காலை 4 மணி வரை நடைபெறும்); ஏன் ஒவ்வொரு இரவு தானியேல் ஜெபக்கூடுகையிலும் கூட ஊக்கமாக ஜெபித்து துதிக்கின்ற இளைஞர்கள் பலர் இருக்கின்றனர்.

2010ல், அவர்கள் "புது எருசலேம் முகாமை" தன்னார்வமாய் நடத்தினர். அதில் அவர்கள் தங்களை தாங்களே உலக கலாச்சாரத்திலிருந்து துண்டித்து கொண்டு வார்த்தை மற்றும் ஜெபத்தின் மூலமாக விசுவாசத்தில் வளர்ந்தனர். கூடுதலாக, அவர்கள் திருச்சபையின் பல பகுதிகளில் முக்கிய பங்கு வகித்து திருச்சபை உலகை நோக்கி ஊக்கமாக முன்னேறும்போது அதில் வேலை செய்வதற்கு தங்களை தாங்களே ஆயத்தம் செய்கின்றனர். அவர்கள் தலைமைப் போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களது ஜெபத்தால் வெளிப்படுத்தப்பட்ட அற்புத அடையாளங்கள், அதிசயங்கள் மற்றும் வல்லமையான கிரியைகள் பலவற்றை கண்டுள்ள காரணத்தால் இப்பேற்பட்ட விசுவாசத்தைப் பெறலாயினர்.

சகோதரர் ஜங்டேக் லீ அவர்கள், "நான் பிறந்த பின்னர் 63வது நாளிலே கிட்டத்தட்ட மரித்துவிட்டேன். காரணம் சுவாச குழாயின் மூலமாக ஒரு மிகப் பெரிய திராட்சை எனது நுரையீரலில் போய் விழுந்துவிட்டது. எனது இருதயம் இரண்டு முறை நின்றுவிட்டது. அறுவை சிகிச்சை செய்து கொள்வதற்கு நான் மிக குட்டி குழந்தை. எனது மருத்துவர் மற்றும் பெற்றோர்களால் எதுவுமே செய்ய முடியவில்லை. ஆனால் தானியங்கி பதிலளிக்கும் முறைமையிலே பதிவு செய்யப்பட்டிருந்த தலைமைப் போதகர் அறிவர். லீ அவர்களது ஜெபத்தால் நான் உயிர்ப்பிக்கப்பட்டேன்" என்று நினைவுகூர்ந்து மொழிந்தார். சகோதரர் லீ திருச்சபை அங்கத்தினர்கள் பலரால் "திராட்சை பையன்" என்று நினைவுகூரப்படுகிறார். 2015ல் அவருக்கு 20 வயதாகிறது. அவர் மருத்துவமனையிலிருந்து வெளியே வந்த போது அவருடைய மருத்துவர் அவருக்கு இழுப்பு மற்றும் சரீர ஊனம் ஏற்படுமோ என்று நம்பி மிகவும் ஐயம் கொண்டார். ஆனால் அவர் தற்போது மிக ஆரோக்கியமாக வளர்ந்துள்ளார். அவர் இந்த வருடம் அந்தஸ்துமிக்க அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் உல்சான் தேசிய கல்விசாலையில் நுழைய உள்ளார். தன்னை உயிர்ப்பித்த தேவனுடைய கிருபையை அவர் மறந்து போகவில்லை. ஆதலால் அவர் அறிவியல் துறையில் பேராசிரியராவதின் மூலமாக ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தையை பரப்ப விரும்புகிறார்.

சகோதரி ஹேயாங் கூ, வயது 20, கலைநிகழ்ச்சி குழுவின் கொரிய பாரம்பரிய நடன குழுவின் ஒரு அங்கத்தினர். சமீபத்தில் ஆண்டவருடைய மகா பெரிதான அன்பை அனுபவித்து முழு உலகில் உள்ள மக்களுக்கு கொரிய பாரம்பரிய நடனத்தின் மூலமாக பரலோக அழகை காண்பிப்பதற்கு தன்னை ஆயத்தப் படுத்தியுள்ளாள்.

அவள் உற்பவிக்கப்பட்டிருந்தபோது, அவளுடைய உரு சிதைந்து போய்விடக் கூடிய பயங்கரமான அபாய நிலையில் இருந்தாள். ஆனால் அவளது தாய் மூத்த கண்காணியை சுன்ஹ்வா காங் அறிவர். லீ அவர்களது ஜெபத்தைப் பெற்றார்கள். அதனால் அவள் சாதாரணமாகவே பிறந்தாள். அக்டோபர் 2014ல் கல்லூரி நுழைவு தேர்வுக்காக பயிற்சி செய்துகொண்டிருந்தபோது, அவளது பரீட்சைக்கு சில நாட்களுக்கு முன்னதாக அவள் கீழே விழுந்து விட்டாள். அவளுக்கு மூட்டு இணைப்பு தசைநாரில் அடிபட்டு காயம் ஏற்பட்டது. மருத்துவமனையில் உள்ள மருத்துவர் அவளை கட்டுப் போட்டுக் கொள்ளும்படி கூறி கையை பயன்படுத்தக்கூடாது என்றார். ஆனால் அவள் GCN TVயில் 'நினைவு கூறுதல்' என்ற நிகழ்ச்சிக்கு பிறகு ஒளிபரப்பப்பட்ட அறிவர். லீ அவர்களது ஜெபத்தைப் பெற்ற பின் முற்றிலும் சுகமானாள். அதன்பின் பரீட்சையை நன்கு செய்து கல்லூரியில் சேர்க்கப்பட்டாள். கொரியாவில் உள்ள இளைஞர்கள் மட்டுமல்ல அயல்தேசத்து கிளை சபைகளில் பலரும் தேவனுடைய வல்லமையை அனுபவித்து, உண்மையுள்ள விசுவாசத்தை அடைந்து, தேவனளித்த தங்கள் கனவுகளை அடைவதற்கு கடுமையாக முயற்சிக்கின்றனர்.

சகோதரர் சந்தோஷ், வயது 22, இந்தியாவில் உள்ள சென்னை மான்மின் பரிசுத்த திருச்சபையை சார்ந்த இவர் உணவு குழாய் பாதிப்புடன் பிறந்தார். உணவு எடுத்துக்கொள்வது அவருக்கு கடினமாய் இருந்த காரணத்தால் அவர் எலும்பும் தோலுமாக சிறிய உடலமைப்புள்ள பையனாக இருந்தார். அவர் சற்று தாமதமாக புரிந்துக்கொள்ளக் கூடியவராக இருந்தபடியால் அவரது குடும்பத்தினர் அவரைக் குறித்து கவலைக் கொண்டனர். அவர் சென்னை மான்மின் பரிசுத்த திருச்சபையில் பங்கு பெற்ற பின்னர், உணவு குழாய் கோளாரிலிருந்து சுகம் பெற்றார். நல்ல பல்கலைக்கழகத்தில் கூட நுழைவதற்கு பரத்திலிருந்து ஞானத்தையும் பெற்றார்.


அவர் திருச்சபையில் தன்னார்வ பணி பலவற்றிற்கு அர்ப்பணித்துள்ளார். அவர், "நான் கல்லூரி பட்டமளிப்பிற்கு பின்னர் சட்டம் படித்து வக்கீலாக மாற விரும்புகிறேன். நான் திருச்சபைக்கு பணரீதியாக மிகப்பெரிய உதவியாகவும் புறக்கணிக்கப்பட்ட ஏழை எளியவர்களுக்கு உதவி செய்யவும் விரும்புகிறேன்" என்று கூறினார்.

தற்போது 23 வயதாகும் பாகிஸ்தானிலுள்ள சகோதரி சிந்தியா ஏழு வயதில் மலச்சிக்கல் மற்றும் சீலியாக் நோய்–இயல்பான நோய் எதிர்ப்பு சக்தி கோளாறு. இதில் சரீரம் கோதுமை, பார்லீ மற்றும் ரேயில் காணப்படுகிற புரதச்சத்தான குளுட்டனுக்கு அது கிரியை காட்டும். அவளது அபாயகரமான நேரத்தில் அறிவர். லீ அவர்கள் அவளது புகைப்படத்திலே ஜெபித்தார்கள். அவள் முற்றிலும் சுகமானாள். அவள் தற்போது லாகூரில் எலைட் மருத்துவ கல்லூரியில் மருத்துவம் படித்துக் கொண்டு இருக்கிறாள். அவள் WCDNனின் ஊழியத்தில் (உலக கிறிஸ்தவ மருத்துவர் குழுமம்) இணைவதின் மூலமாக தேவனுடைய வல்லமைக்கு மருத்துவ சாட்சியாக விரும்புகிறாள்.

சகோதரர் அர்னால் மோலினா, வயது 22, பெரு மான்மின் திருச்சபையின் இளைஞர் பணித்தளத்தின் தலைவர். ஆராதனை வேளையில் அறிவர். லீ அவர்களது வியாதியஸ்தர்களுக்கான ஜெபத்தால் விளையாட்டு அடிமைத் தனத்திலிருந்து விடுதலையானார் மற்றும் நுரையீரல், கழுத்து வலியிலிருந்தும் சுகமானார். சகோதரர் அர்னால் ஜீவனுள்ள தேவனுக்கு சாட்சியாக மிஷனரியாக விரும்புகிறார். தேவனுடைய ராஜ்ஜியத்திற்காக பயன்படும்படியாக, அவர் தேவனுடைய வார்த்தை மற்றும் போர்ச்சுகீசியம் மொழியை படித்து பெரு மான்மின் திருச்சபைக்கு ஊழியம் செய்கிற போதகர். லாசரஸ் J.லீ அவர்களுக்கு உதவி செய்கிறார்.

பல இளைஞர்கள் இவைகளுக்கு கூடுதலாக ஜீவனுள்ள தேவனுடைய வல்லமையால் ஆவியிலும் சரீரத்திலும் உயிர்ப்பிக்கப்பட்டு, அவர்கள் தற்போது நாளுக்கு நாள் தேவனளித்த நம்பிக்கையின் நிறைவோடும், தங்கள் வெறுமையான இருதயங்களை எவ்வாறு நிரப்புவது என்று அறியாமல் உலகில் அலைந்து திரிகிற எண்ணற்ற ஜனங்களுக்கு தேவனுடைய அன்பை பரப்பும் நம்பிக்கையோடும் வாழ்கின்றனர்.

உமது பராக்கிரமத்தின் நாளிலே உம்முடைய ஜனங்கள் மனப்பூர்வமும் பரிசுத்த அலங்காரமுமுள்ளவர்களாயிருப்பார்கள்; விடியற்காலத்துக் கர்ப்பத்தில் பிறக்கும் பனிக்குச் சமானமாய் உம்முடைய யௌவன ஜனம் உமக்குப் பிறக்கும் ( சங்கீதம் 110:3).









# கனி



தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ

"சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக"
(1தெசலோனிக்கேயர் 5:23).

•••

இவ்வுலகம் எவ்வளவு பிரச்சனைக்குரியதாக இருந்தாலும், நாம் ஒளியிலே நடக்கும்போது சமாதானத்தையும் தைரியத்தையும் கொண்டிருக்க முடியும். 2015ல் அபரிதமான கனியோடு நம்மை ஆசீர்வதிக்கிற தேவன் 2015ற்காக நான்கு ஜெபத் தலைப்புகளை தந்துள்ளார். நாம் இப்போது இரண்டாவது ஜெபத்தலைப்பான "கனியை" பார்ப்போம்.

### 1. "பூரண ஆவி"யின் கனியை தான் தேவன் மிகவும் விரும்புகிறார்

எவ்வகையான கனிக்காக நாம் ஜெபிக்க வேண்டும்? தேவன் மிகவும் அதிகமாக விரும்புகிற கனி என்னவென்றால் 1 தெசலோனிக்கேயர் 5:23ல் எழுதப்பட்டபடி ஆத்துமா மற்றும் சரீரத்தை பரிசுத்தப்படுத்தி ஆண்டவர் மீண்டும் வரும் வரை முற்றிலுமாக குற்றமற்றதாய் காக்க வேண்டும் என்பதே.

தேவன் கணக்கிட இயலாத அளவு பொறுமையோடு மனிதர்களை பண்படுத்துவதின் காரணம் மெய்யான பிள்ளைகளைப் பெற வேண்டும் என்பதற்காகவே. இது நடைப்பெற வேண்டுமேயானால் அங்கு ஒரு பலி செலுத்தப்பட வேண்டும். தேவனுடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசு, பாவிகளின் இரட்சிப்பிற்காகவும் மீட்பின் வழி திறப்பதற்காகவும் சிலுவையை எடுக்க வேண்டியிருந்தது. மேலும், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு வேண்டுதல் செய்தும் கொண்டிருக்கிறார்.

முடிவை நோக்கிய இவ்வுலகில் பாவமும் தீமையும் அதிகமாக தாண்டவமாடிக் கொண்டிருக்கிறபடியால், ஜனங்கள் சிலுவையின் தியாகத்தை நினைக்க முயற்சிப்பதில்லை. பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு சத்தியத்தை மிக ஆவலாக போதித்தாலும்கூட, அவர்கள் அதைக் கேட்க விரும்புவதில்லை. இதன் காரணம் அவர்களது மனசாட்சியானது பாவத்தினால் கறைபடிந்துள்ளது. உலகின் சோதனைகளும்கூட மிக வலுமையாக உள்ளது.

அதனால் அன்பின் தேவன் இக் கடைசி காலக் கட்டத்தில் தம்முடைய வல்லமையை காண்பிக்கிற சபை ஒன்றை ஸ்தாபித்தார். இத்திருச்சபையில் வெளிப்படுத்தப்பட்ட பரிசுத்த ஆவியானவரின் அக்கினியான கிரியைகள் மூலமாக உலகில் உள்ள அனைத்து மக்களையும் அவர் இரட்சிக்க விரும்புகிறார். மேலும், உண்மையுள்ள இருதயத்தையும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தையும் பெற்ற மெய்யான பிள்ளைகளைப் பெற விரும்புகிறார், சாதாரணமாக இரட்சிக்கப்பட்டவர்களை அல்ல.

இதன் காரணமாகவே தேவன் என்னை மேய்ப்பராக நியமித்து 33 நீண்ட வருடங்கள் நான் கண்ணீரில் செலவழிக்கும்படி செய்துள்ளார்.

தேவனுடைய சித்தத்திற்கு தன்னைப் பரிபூரணமாக பலி செலுத்திய இயேசுவின் அடிச்சுவடுகளை பின்பற்றும்படி என்னை நான் முற்றிலும் அர்ப்பணிக்கும்படி செய்தார். நான் ஜெபத்தோடு முழு–இரவு ஜெபத்தோடும் உபவாசத்தோடும் நான் வாழும்படி செய்தார். இதன்மூலமாக, தேவன் நான் ஆவிக்குரிய மண்டலத்தைப் பற்றி தெளிவாக அறிந்து கொள்ளும்படி செய்தார்; எப்படி பரிசுத்தமாவது என்பதை விளக்கமாக எனக்கு விவரித்தார். ஜீவனுள்ள தேவனுக்கு சாட்சி பகரும்படியாக இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வல்லமையான கிரியைகளை நான் வெளிப்படுத்தும்படி செய்தார். ஆனால் நான் அப்பேற்பட்ட வல்லமையை காண்பித்தாலும்கூட, ஆவியின் கனி எளிமையாக வெளிவரவில்லை. மாறாக சிலர் தேவனுடைய வல்லமையை உணர்ந்த பின்னரும் உலகத்திற்கு திரும்பி சென்றுவிட்டனர்.

விளைவாக, பல ஆண்டுகளாக சிறப்பு நீதியின் அளவை நிரப்பும்படி நான் நேரத்தை செலவழித்தேன். மரணத்திற்கு நேராக வழி நடத்தும் பாவங்களும்கூட மன்னிக்கப்படும்படி நான் ஜெபித்தேன்; மேலும் ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுவது மாத்திரமல்ல ஆவியின் கனிகளாக வேண்டும் என ஜெபித்தேன். விவரிக்க இயலாத துக்கத்தோடு பல நாட்களை நான் செலவழிக்க ஆவியின் கனி ஒன்றன்பின் ஒன்றாக விளைய ஆரம்பித்தது. இறுதியாக 2014ல் நாம் "ஆவியின் நியம திட்டத்தை" அடையப் பெற்றோம்.

### 2. சற்குண கனிக்காக பூரண ஆவியின் ஓட்டம்

"ஆவி"யின் நிலையில் இருப்பதென்பது தீமைகள் அனைத்தையும் களைந்துபோட்டு சுத்தமான பாத்திரத்தை விளைவிக்கக்கூடிய ஒன்று. ஆயினும் அது இன்னமும் சற்குண கனியாகவில்லை. இந்த சுத்தமான பாத்திரத்தில் ஆவியின் பொருளடக்கங்கள் முற்றிலுமாக நிரம்பியுள்ள பூரண ஆவியின் கனியை தான் தேவன் நிஜமாக விரும்புகிறார். நீங்கள் ஆவியில் இருந்தாலும்கூட, நீங்கள் ஆவியின் ஆழமான நிலைக்குள்ளும், பூரண ஆவிக்குள்ளும் செல்லும்படி முன்பை காட்டிலும் அதிக கடினமாக முயற்சிக்க வேண்டும். நீங்கள் ஆவிக்குள்ளாக வரும்படியாக உங்களில் உள்ள காரியங்களை அறிந்துணர முயற்சித்ததுபோல, இப்போது பூரண ஆவிக்குள்ளாக நீங்கள் செல்வதற்காக இன்னும் அதிக கடினமாய் நீங்கள் முயற்சிக்க வேண்டும். நீங்கள் ஒரு க்ஷணப் பொழுதுகூட "ஆவிக்குள்ளாக வர நான் கடினமாய் முயற்சித்துவிட்டேன்; அதனால் நான் சற்று ஒய்வெடுக்கட்டும்" அல்லது "நான் போதுமான அளவு செய்துவிட்டேன்; நான் இப்போது இதை எளிமையாக எடுத்துக்கொள்ள விரும்புகிறேன்" என்று நினைத்துவிடவே கூடாது. நீங்கள் உங்களது பற்றாக்குறைகளையும், குறைவுகளையும் உணரும்போது நீங்கள் அதை மறைத்து விடக்கூடாது.

பூரண ஆவியை அடைவது என்பது ஏதோ எளிதாய் செய்யக்கூடிய சாதாரணமான காரியம் அல்ல. எலியா, மோசே மற்றும் அப்போஸ்தலனாகிய பவுல் அடைந்தது போல பூரண ஆவியை அடைவதற்கு நீங்கள் முற்றிலுமாக உங்கள் "சுயத்திற்கு அனுதினமும் சாக வேண்டும்." பிலிப்பியர் 3:13–14ல் வாசிக்கிறோம், "சகோதரரே, அதைப் பிடித்துக் கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை. ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கி தொடருகிறேன். எழுதப்பட்டுள்ளபடி நாம் தெளிந்த புத்தியுள்ளவர்களாய் விழிப்போடு இலக்கை நோக்கி ஓட வேண்டும்.

அதோடு, பூரண ஆவியின் ஓட்டம் வேகமாக மாறும்போது, விசுவாசத்தின் கன்மலையை அடைகிற ஓட்டமும், ஆவிக்குள் நுழைவதும் மிக துரிதமாகிவிடும். நாம் அனைவரும் அந்த ஓட்டத்தில் ஓடும்படி இணைந்து தீவிரமாக ஆவிக்குள், பூரண ஆவிக்குள் செல்ல வேண்டும்.

### 3. பூரண ஆவியின் ஓட்டத்தில், உங்களை மாற்றிக்கொள்வதற்கான உங்களது கிரியைகள் இருக்க வேண்டும்

இந்த ஓட்டத்தில் ஓடுவதற்கு நீங்கள் குறிப்பாக செய்ய வேண்டிய காரியம் என்ன? நீங்கள் தேவனுடைய வார்த்தையை கற்க வேண்டும்; நீங்கள் உபவாசத்தோடு ஊக்கமாக ஜெபிக்க வேண்டும்; ஆவிக்குரிய விசுவாசமும் பரலோகத்தின் நம்பிக்கையும்கூட மிக முக்கியம். நீங்கள் தேவனையும் ஆண்டவரையும் நேசிக்க வேண்டும்; மேய்ப்பரையும் நேசித்து நம்ப வேண்டும். ஆனால் தற்போது உங்களுக்கு மிக அவசியமான காரியம் என்னவென்றால், நீங்கள் உங்களை மாற்றிக் கொள்வதற்கான உங்களது கிரியை என்னும் செயல்களை கொண்டிருக்க வேண்டும்.

நீங்கள் பாவங்களையும் தீமையையும் களைந்துப்போட்டு ஆவிக்குள் செல்வதற்கும், உங்களது பற்றாக்குறைகள் மற்றும் குறைவுகளை நிறைவு செய்து பூரண ஆவிக்குள் செல்வதற்கும், நீங்கள் சத்தியத்திற்கு செயல்வடிவமாய் கீழ்ப்படிய வேண்டும். ஆவிக்குள், பூரண ஆவிக்குள் செல்ல வேண்டும் என்று நீங்கள் ஜெபித்தால் மாத்திரம் போதாது. உங்களது பூரணமற்ற காரியங்களை அறிந்துணர நீங்கள் வாஞ்சிக்க வேண்டும்.

உதாரணமாக, செய்திகளை கேட்கும்போது எந்தளவு வாஞ்சையுள்ள இருதயம் உங்களுக்கு இருக்கிறது? நீங்கள் ஆவிக்குள் இல்லையென்றால், நீங்கள் செய்திகளை கேட்பதற்கு பின்வரும் அடிப்படையான மனப்பான்மை இருக்க வேண்டும்: "இன்னும் எனக்குள் இச்சை இருக்கிறதா? விபச்சாரம், கோபம், பேராசை, வெறுப்பு, பகைமை, பொறாமை, நியாயந்தீர்த்தலும் குற்றஞ்சாட்டுதலும், மாறுகிற மனநிலை மற்றும் பொய்கள் எனக்குள் இருக்கிறதா?" ஏற்கனவே ஆவிக்குள்ளாக இருப்பவர்களுக்கும் இது ஒன்றே. நீங்கள் உங்கள் மனதையும் சிந்தையையும் மற்றும் உங்கள் வார்த்தைகள் செயல்களையும், "நான் அதிக நற்குணத்தோடும் அன்போடும் நடந்திருக்க வேண்டும். இந்த சூழ்நிலையில் ஆண்டவர் என்ன செய்வார்?" என்று எண்ணி மிக கவனமாய் உங்களை பரிசோதிக்க வேண்டும்.

நீங்கள் உங்கள் குறைவுகளை உணர்ந்துவிட்டால் பின்னர் நீங்கள் என்ன செய்ய வேண்டும்? நீங்கள் அறிந்துணர்ந்த பாவங்களையும் தீமைகளையும் களைந்துப்போட வேண்டும். நீங்கள் நற்குணத்தையும் அன்பையும் நிறைவு செய்ய வேண்டும். யாக்கோபு 1 : 23–25 சொல்கிறது, "என்னத்தினாலெனில், ஒருவன் திருவசனத்தைக் கேட்டும் அதின்படி செய்யாதவனானால், கண்ணாடியிலே தன் சுபாவ முகத்தைப் பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாயிருப்பான்; அவன் தன்னைத்தானே பார்த்து, அவ்விடம் விட்டுப் போனவுடனே, தன் சாயல் இன்னதென்பதை மறந்து விடுவான். சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்தை உற்றுப் பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்."

நீங்கள் அறிந்துணர மட்டும் செய்து செயல்படாவிட்டால், பின் அதினால் ஒரு பிரயோஜனமும் இல்லை. ஏதும் மாறாது. நீங்கள் கண்ணாடியில் பார்க்கையில் உங்கள் முகத்தில் கரி இருப்பதை கண்டு அதைக் கழுவாமல் விட்டுவிட்டால் அல்லது முக அலங்காரம் செய்துக் கொள்ளும் பெண்மணி அவளது ஒரு புருவம் மற்ற புருவத்தோடு ஒப்பிடும்போது மங்கலாக இருக்கிறது என்று கண்டும் சரிப்படுத்தாமல், அதை அப்படியே விட்டுவிட்டால், அது இருந்தது போலதான் இருக்கும். எந்த ஒரு மாற்றமும் ஏற்படாது.

சில மக்கள் செய்திகளினாலே ஆசீர்வதிக்கப்பட்டதாய் உணருவர். ஆனால் அதற்கேற்ற செயல்களோ கிரியைகளோ அவர்களிடத்தில் இராது. அதனால் அவர்களால் விசுவாசத்தில் வளர முடியாது. அவர்கள் தங்களைக் குறித்து ஏதோ ஒன்றை உணர்ந்து அதற்காக ஜெபிப்பர். ஆனாலும் அவர்கள் ஜெபித்த பின்னரும் அவர்கள் முன்பு வாழ்ந்தபடியே வாழ்ந்து கொண்டு இருப்பர். அவர்களுக்கு ஏதாயினும் பிடிக்கவில்லையென்றால், அவர்கள் நியாயந்தீர்த்துக் குற்றஞ்சாட்டி தங்கள் தீமைகளை வெளிப்படுத்துவர். அவர்கள் இன்னும் வெறுக்கலாம்; எரிச்சலடையலாம்; சமாதானத்தையும் உடைக்கலாம்; அவர்களால் தயாளமாய் இருக்க முடியாது. அவர்களால் மற்றவர்களுடைய ஆதாயத்தைத் தேட முடியாது. அவர்கள் உபவாசித்து ஜெபிப்பதால் பரிசுத்தத்திற்காக வாஞ்சிக்கிறோம் என்று கூறினாலும், இன்னமும் அவர்கள் சத்திய வார்த்தையினால் தங்களைப் பண்படுத்தவில்லை. ஆனால் அவர்கள் அவைகளை அறிந்திருக்கிறோம் என்று எண்ணி வீணான சிந்தனைகள் மற்றும் கனநித்திரையில் வழுவி விடுவர்.

எந்தளவாய் உங்கள் குறைவுகளை கண்டறிய வாஞ்சையுள்ளவர்களாய் இருக்கிறீர்கள் என்பதை உணருவதற்கு நீங்கள் முதலாவது உங்களை ஆராய்ந்து பார்ப்பீர்கள் என நான் நம்புகிறேன். மேலும், நீங்கள் உங்கள் குறைவுகளை அறிந்துணரும்போது நீங்கள் விதைத்துள்ள சத்தியம் மற்றும் கிரியைகளின் அளவை கண்டறிய உங்களை நீங்கள் பரிசோதிப்பீர்கள் என நம்புகிறேன்.

மனிதருடைய முயற்சியால் மட்டுமே நீங்கள் மாற முடியாது. ஏற்றபடியான முயற்சியில்லாமல் உங்களது ஜெபத்தினால் மாத்திரம் தேவனால் உங்களைப் பரிசுத்தமாக்க முடியாது. நீங்கள் உபவாசித்து ஜெபித்தால், உங்கள் மனதை நீங்கள் உறுதியாய் நியமித்துக் கொண்டு அதை நிஜமான செயல்களில் காட்ட வேண்டும். இப்படித்தான் நீங்கள் பூரண ஆவியின் ஓட்டத்தில் நன்கு ஓட முடியும்.

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, யாராகிலும் "நான் இரட்சிக்கப்பட்டதிலேயே திருப்தியாக உள்ளேன்" என்று நினைக்கிறீர்களா? நீங்கள் இது தாழ்மையாய் இருப்பது போல தொனிக்கிற வாக்கியம் என்று நினைக்கலாம். ஆனால் ஆவிக்குரிய ரீதியில் அவைகள் நற்குணத்தின் வார்த்தைகளே அல்ல. நமக்கு சாதாரணமாக இரட்சிப்பை மட்டுமே தருவதற்கு இயேசு சிலுவையை சுமந்து தாங்கொன்னா வேதனையை அடையவில்லை.

உங்களது ஆத்துமாக்கள் ஆவி மற்றும் பூரண ஆவிக்குள் சென்று தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பு நிற்பதைக் கண்டு, ஆண்டவர் சிலுவையிலே தமது பாடுகளுக்காக வெகுமதியளிக்கப்படுவார் (1தெசலோனிக்கேயர் 2:19). தேவன் மனித பண்படுத்துதலின் நோக்கத்தை அடையப்பெற்று முற்றிலுமான ஜெயத்தைப் பிரகடனப்படுத்துவார். நீங்கள் முற்றிலுமாக ஆவிக்குரிய கனிகளாய் விளைவதற்கு ஆண்டவருடைய நாமத்தினால் உங்களுக்காய் நான் ஜெபிக்கிறேன்.

**விசுவாசத்தின் அறிக்கை**

**1. மான்மின் மத்திய திருச்சபை வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்ட பரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.**

**2. மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது; பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்**

**3. மான்மின் மத்திய திருச்சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.**

**4. மான்மின் மத்திய திருச்சபை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.**

**5. மான்மின் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடிவரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை "அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்" மூலமாக அறிக்கை செய்து, அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புக்கின்றனர்.**

"எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் (தேவன்)..." (அப். 17:25)

"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" (அப். 4:12)



# சுய-பரிசோதனை : பரிசுத்தமாகுதலுக்கு குறுக்கு வழி

அகராதி ஒன்று "பரிசோதனை" என்ற வார்த்தையை 'கவனமாக கவனித்தல் அல்லது ஆராய்தல்; தணிக்கை செய்தல்; படி அல்லது பகுதிகளாக பிரித்தல்' என்று வகையறுக்கிறது. நீங்கள் உங்களைப் பரிசோதிப்பதை பழக்கமாக்கி கொண்டால், உங்களால் தேவனுடைய வார்த்தையை உங்கள் இருதயத்தில் வைத்து அதை வழுவி போகவிடாமல் பயிற்சி செய்ய முடியும். அதனால் உங்கள் இருதயத்தில் உள்ள தீமையான ரூபங்களையும் பாவங்களையும் நீங்கள் கண்டறிந்து அவைகளை களைந்துப் போட்டு தேவனைப் பிரியப்படுத்தலாம். எளிமையாக சொன்னால், தேவனுடைய வார்த்தையை நீங்கள் உங்கள் இருதயத்தில் சுமந்து உங்கள் வார்த்தைகள், கிரியைகள், சிந்தனைகளை அந்த வார்த்தையின் அடிப்படையிலே பரிசோதிக்கும்போது, நீங்கள் பரிசுத்தமாகுதலை தீவிரமாய் பெறலாம். ஆகவே நாம் இப்போது எதை எப்படி பரிசோதிக்க வேண்டும் என்று விரிவாக பார்ப்போம்.

**முதலாவதாக,**

நாம் தேவனுடைய வார்த்தையை பரிசோதனை செய்து அதை நம்முடைய இருதயங்களில் வைக்க முயற்சிக்க வேண்டும்.

செய்தியின் வேளைகளில், நீங்கள் உங்கள் இருதயத்தை திறந்து கவனமாய் பிரசங்கங்களைக் கேட்டால், அதை எளிமையாக புரிந்துக் கொள்ளலாம். ஆனால் அதற்கென்று அச்செய்தியை நீங்கள் இருதயத்தில் வைத்துவிட்டீர்கள் என்று அர்த்தமாகாது.

அந்த செய்தி பல காரணங்களுக்காக உங்கள் சிந்தையிலிருந்து வழுவி விடலாம். அதாவது : அது உங்கள் அறிவோடு ஒத்துப்போகவில்லை; காரணம் கருத்தை கவனியாமல் கூர்ந்து கேட்காமல் வெறுமனே கேட்க மட்டும் செய்கிற தவறான பழக்கம் உங்களுக்கு இருப்பதால், உங்கள் இருதயத்தில் சத்தியம் குறைவாக இருக்கும்; அல்லது நீங்கள் உலகப்பிரகாரமான காரியங்களில் நிரம்பி இருப்பீர்கள். நீங்கள் இக்காரணங்களைப் பரிசோதிக்க வேண்டும்.

செய்திகளைக் கேட்ட பின்னர் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை நாம் இப்போது பார்ப்போம். "அன்பு, நீடிய பொறுமை உள்ளது" என்ற செய்தியை நாம் கேட்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். நாம் திரும்ப திரும்ப அதைக் கேட்டு அதிலுள்ள தேவ சித்தத்தை ஆராய்ந்து இருதயத்தில் வைக்க முயற்சிக்க வேண்டும். அப்படிச் செய்தால் மட்டுமே, நாம் இருதயத்தில் எரிச்சலை உணர்ந்தாலும் முதலாவதாக நாம் பொறுமையோடு நம்முடைய கோபத்தை அடக்குவோம். கூடுலதலாக நாம் நீடிய பொறுமை அவசியப்படாத, அன்பை நாம் அடையப் பெறும்படி தேவன் விரும்புகிறார் என்பதை நாம் நினைவுகூர்ந்து அப்பேற்பட்ட அன்பை அடைய முயற்சிப்போம். இவ்வழியில் நாம் நீடிய பொறுமையின் கனியை விளைவிக்கலாம்.

நாம் தேவனுடைய வார்த்தையை பரிசோதித்து இருதயத்தில் அதை வைத்து, அதை நிலைத்தரமாக வைத்து வார்த்தையை பயிற்சி செய்யும்போது நாம் பரிசுத்தமாகுதலை அடையப்பெறலாம். ஆனால் நாம் நீடிய பொறுமையை குறித்து கற்றும் நாம் கசப்புணர்வுகளை இன்னமும் அடக்கிக் கொண்டு இருக்கிறோம் என்பதை கண்டறிந்தால் என்னவாகும்? அப்படியானால் பரிசுத்தமாகுதலுக்காக இன்னும் நாம் நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். தேவன் எல்லாவற்றையும் அரவணைத்துக் கொள்கிற நீடிய பொறுமையை நம்மில் விரும்புகிறார். அவர் நீடிய பொறுமையே அவசியமில்லாத ஒரு நிலையை விரும்புகிறார்.

கிறிஸ்தவர்கள் தேவனுடைய வார்த்தையை கற்றுக் கொள்கின்றனர். ஆனால் அவர்களில் பலர் அதை எளிதாய் மறந்து விடுகின்றனர். இது அநேகமாக அவர்கள் இருதயத்தில் பல பொய்யான சுபாவங்களை வைத்திருப்பதாலேயே. அவர்கள் அதை உணர்ந்து ஊக்கமாக ஜெபித்து, தேவனுடைய வார்த்தையிலே ஒருமுகப்பட்டு, அவ்வார்த்தைகளை தங்கள் இருதயத்தில் வைக்க பழகி அதைப் பயிற்சிக்க வேண்டும்.

**இரண்டாவதாக,**

வார்த்தையோடு நாம் நம்மை பிரதிபலித்து நம்மை பரிசோதிக்க வேண்டும்

நாம் தொடர்ந்து நீடிய பொறுமையை குறித்த செய்தியை யோசிப்போம். இப்போது இருதயத்தில் அடக்கி கொண்டிருப்பது பூரண பொறுமை அல்ல என்பதை நாம் அறிந்து கொண்டோம். பின் நாம் செய்தியோடு நம்மை நாமே ஆராய வேண்டும். பரிசோதனை என்பது கவனமாய் கவனிப்பது. தேவனுடைய வார்த்தை மூலமாக ஒருவரது கிரியைகள், உணர்வுகள், இருதயம் மற்றும் ஒடி மறையும் எண்ணங்களை பிரதிபலித்து ஆராய்தல் ஆகும்.

உங்களுடன் வேலை பார்ப்பவர் சத்தியமற்றதில் செயல்படுகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதனால் நீங்கள் அவரை கடிந்துக் கொண்டீர்கள். ஆனால் அவரோ போராட்டத்தை காண்பிக்கிறார். அது அவருக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தி விடுகிறது. இப்போது நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

நீங்கள் சொன்ன மற்றும் செய்த காரியத்தில் உங்களை பிரதிபலித்து பரிசோதனை செய்ய வேண்டும். எதற்காகவென்றால், உங்களது வார்த்தைகளில் சற்றேனும் அசௌகரியம் இருந்ததா அல்லது ஏதோ ஒரு ரீதியில் உங்களுடைய கடிந்துக்கொள்ளுதல் சரியற்றதாய் இருந்ததா என்று பார்க்க வேண்டும். உங்களை நீங்கள் பரிசோதியாமல் மற்றவர்களது தவறுகளை அர்த்தப்படுத்த முயற்சித்தால், உங்கள் இருதயத்தை நற்குணத்தாலும் அன்பாலும் பண்படுத்த முடியாது.

மற்றுமொரு உதாரணத்தைக் குறித்துப் பேசுவோம். உதாரணமாக யாரோ ஒருவர் உங்களை வைததாக நீங்கள் கேள்விப்படுகிறீர்கள். நீங்கள் அவரோடு வாக்குவாதம் செய்யாமல் இருக்கலாம். ஆனால் உங்களுக்கு அதைக் குறித்து கெட்ட உணர்வுகள் இருந்ததா, மனவருத்தத்தை உணர்ந்தீர்களா, உங்களது நெருங்கிய நண்பர்களிடத்தில் அதைக் குறித்து குறை கூறினீர்களா அல்லது அவர் தவறு செய்யும்போது அவரை விமர்சித்தீர்களா என்று நீங்கள் பார்க்க வேண்டும். அதன்பின்னர் உங்களில் வெறுப்பு இன்னமும் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும்.

இப்போது ஒருவர் மற்றவர்களால் பாராட்டப்படுகிறார் என்று வைத்துக் கொள்வோம். அவரது குறைவு உங்கள் மனதில் ஓடிக்கொண்டிருக்கிறதா? அப்படியானால், அவருக்கு நேரே உங்களுக்குப் பொறாமை இருக்கிறது என்று அது காண்பிக்கிறது. இதுவரைக்கும் விவரிக்கப்பட்டபடி, நாம் நம்மை சீர்தூக்கிப் பார்த்து நமக்கு இருக்கிற ஒவ்வொரு நினைவையும், அது ஒரு க்ஷணப்பொழுது கடந்துப்போனதாக இருந்தாலும்கூட நாம் அதை ஆராய வேண்டும். இப்படி தான் நாம் தீவிரமாக பரிசுத்தமாகுதலைப் பெற முடியும்.

முன்னதாக சொல்லப்பட்டபடி, நாம் தேவனுடைய வார்த்தையால் நம்மை பிரதிபலித்து பரிசோதனை செய்ய வேண்டும். மிக முக்கியமாக, நாம் நம்முடைய தவறுகளை, குறைவுகளை தாழ்மையாக ஒத்துக்கொள்ள வேண்டும். மேலே விவரிக்கப்பட்டபடி நம்முடைய வார்த்தையால் யாராவது அசௌகரியத்தை உணர்ந்தாலும், நாம் அன்போடு சில காரியத்தை சொல்லியிருந்தாலும், நாம் செய்தது பூரண நற்குணமாய் இருந்தாலும், நாம் எதில் குறைவுள்ளவர்களாய் இருக்கிறோம் என்று அறிந்து பற்றாக்குறையை ஒத்துக்கொள்ள வேண்டும். அதினால் நாம் பூரண ஆவிக்குரிய மனிதர்களாய் மாறலாம்.

**மூன்றாவதாக,**

நாம் இருதயத்திலுள்ள பாவசுபாவங்களை ஆராய்ந்து அவைகளுக்காய் ஜெபிக்க வேண்டும்

பரிசுத்தமாகுதலை அடையப் பெறுவதற்கு நாம் நம்முடைய கடந்தகால பாவங்களை மட்டுமல்ல, நம்மை பாவம் செய்ய வைத்த பாவசுபாவங்களையும் கூட அறிக்கை செய்ய வேண்டும், நாம் அவைகளை இப்போது செய்யா விட்டாலும்கூட. மேலும் நாம் நம்முடைய இருதயங்களிலிருந்து தீமையின் ரூபங்களையும், பாவசுபாவங்களையும் வேரோடு பிடுங்கி எறிய வேண்டும். நம்முடைய கடந்தகால பொல்லாத கிரியைகளை ஆராய்ந்து அறியும்போது, நம் இருதயத்தின் ஆழத்தில் இருக்கும் பாவ சுபாவங்களை நாம் காண முடியும்.

நமது கடந்தகால சத்தியமற்ற கிரியைகளுக்கு நாம் இன்னமும், சாக்குப் போக்கு சொல்லி கொண்டிருப்போமானால், நாம் நம்மை கண்டறிந்து மாற்ற முடியாது. நாம் நம்முடைய நிலையிலிருந்தும் கண்ணோட்டத்திலிருந்தும் நம்மை பிரதிபலியாமல், தேவனுடைய வார்த்தையினால் மட்டுமே நம்மை பிரதிபலிக்க வேண்டும். அப்போது நாம் நம்முடைய தவறுகளை எளிதாக கண்டறிய முடியும். உதாரணமாக கருத்துக்கள் நடுவில் வாக்குவாதம் வந்து நீங்கள் மற்றவர்களோடு வாக்குவாதம் செய்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். பின் நீங்கள் உங்கள் நடக்கைகளை ஆராய்ந்து, உங்களை வாக்குவாதம் செய்யத் தூண்டிய பாவசுபாவத்தை கண்டறிந்து, அதை இனி செய்யாமலிருப்பதற்காக அதைக் களைந்து போட வேண்டும்.

மற்றவர்களுடைய நடத்தை முற்றிலும் தவறாக இருந்தாலும்கூட நாம் முடிவுபரியந்தம் முதலாவதாக அவர்களைக் கவனிக்க வேண்டும். இது எப்போதென்றால் அவர்கள் கருத்துக்களில் எது தவறு என்று நாம் பேச முடிந்தால், அவர்கள் பேசும்போது நாம் அவர்களை ஒதுக்கி பேசக் கூடாது. நாம் அவர்களை அப்படி செய்தால், அது நமக்கு ஆணவம் இருக்கிறதென்பதை காண்பிக்கிறது. விவரிக்கப்பட்டபடி, இப்படிப்பட்ட நிகழ்வின் மூலமாக தேவனுடைய வார்த்தையின் அடிப்படையிலே நாம் நம்முடைய பாவ சுபாவங்களை கண்டறிய முடியும்.

வாக்குவாதம் செய்யக்கூடாது என்று நாம் ஜெபிப்பதைக் காட்டிலும் உங்களை வாக்குவாதம் செய்ய வைத்த உங்கள் பாவ சுபாவங்களை நீங்கள் துப்பறிய வேண்டும். நீங்கள் எப்போதும் ஜெபித்துக் கொண்டிருந்தாலும், நீங்கள் மாறுவது மெதுவாக காணப்பட்டால் நீங்கள் இன்னும் உங்கள் பாவ சுபாவங்களை கண்டறியவில்லை என்பது போலாகும்.

தீவிரமாக பரிசுத்தமடைய நாம் தேவனுடைய வார்த்தையோடு நம்முடைய வாழ்வை பிரதிபலித்து, நம்முடைய குறைவுகளையும் பாவச் சுபாவங்களையும் ஏற்படுத்துபவற்றைக் கண்டறிந்து அவைகளை முற்றிலுமாய் மறையும் வரைக்கும் நாம் தொடர்ந்து அகற்ற வேண்டும். தேவனுடைய வார்த்தையால் நம்மைப் பரிசோதித்து நம்முடைய பாவ சுபாவங்களை இனம் கண்டுகொள்ளுதலே பரிசுத்தமாகுதலுக்கு குறுக்கு வழி.

# "எனது கிறிஸ்தவ வாழ்வில் நான் சந்தோஷத்தை அனுபவித்தேன்"

**கண்காணியை யூன்ஜீ கிம், வயது 41, 16வது மாகாணம்**



யோன்சான் பல்கலை கழகத்தின் இசைக் கல்லூரியில் நான் நுழைந்து கருவிகள் இசைக்கும் துறையில் பட்டம் பெற்றேன். கருவி இசை கற்கிற மற்ற மாணவர்கள் செய்ததுபோல நானும் திருச் சபை ஒன்றில் எக்காளம் இசைப்பவராக பகுதி நேர வேலையை செய்ய ஆரம்பித்தேன்.

பட்டம் பெற்று மாணவர்களுக்கு எக்காளம் இசைக்க கற்றுக்கொடுத்தேன். அச்சமயத்தில் அதே கல்லூரியில் பங்குபெற்ற கண்காணியை யுன்ஜங் கிம் மான்மின் மத்திய திருச்சபையின் நிசி இசைக்குழுவை குறித்துப் பேசினார்கள். நான் நேர்காணல் தணிக்கை செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டேன். ஏப்ரல் 2002, நான் சபையின் ஆராதனைகளில் பங்கு பெற ஆரம்பித் தேன். நான் கல்லூரி நாட்களில் பங்கு பெற்ற மற்ற சபைகளிலிருந்து இந்த சபை சற்று வித்தி யாசமானதாய் காணப்பட்டது.

வேதத்தில் உள்ள தேவனுடைய வார்த்தையின் அடிப்படையிலே இச்சபை நம்முடைய பாவங்களைச் சுட்டி காண்பிக்கிறது. இந்த சபையில் விசுவாச வாழ்வு நடத்துவது மிக கடினம் என்றே நான் உண்மையில் நினைத்தேன். எனினும், 2013 ஜன வரியில் நான் திடீரென்று ஊக்கமான கிறிஸ்தவ வாழ்வு வாழ வேண்டும் என விரும்பினேன்.

என்னுடைய தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்கள் என்னைப் போன்ற ஒரு நபருக்காக அன்போடும் கண்ணீரோடும் மிக நீண்ட காலமாய் சகித்து கொண்டு வந்ததின் விளைவாக எனக்கு இந்த நம்பிக்கை அளிக்கப் பட்டது; அதற்காக அவருக்கு நன்றி தெரிவிக் கிறேன்.

அச்சமயத்தில் அவரது பிரசங்கங்களைப் புரிந்துகொள்வதற்கு போதுமான அறிவு எனக் கில்லை. அதனால் நான் அவரது இருபது புத்தகங் களைப் படித்தேன். அவைகளை வாசிக்கும்போது தான் இந்த விலையேறப் பெற்ற செய்திகள் அங்கத்தினர்கள் சந்தோஷத்துடன் நம்பிக்கை யான கிறிஸ்தவ வாழ்வு வாழ செய்திருக்கின்றன ரன்பது என்னிலே உதித்தது.

மே 2013 முதல் நான் தானியேல் ஜெபக் கூடுகையில் ஜெபிக்க ஆரம்பித்தேன். குறைந்த பட்சம் முப்பது நிமிடங்களாவது அநுதினமும் பங்குபெற வேண்டும் என மனதை நிர்ணயித்துக் கொண்டேன். நான் ஜெபத்தால் அதிகமாக மேய்ப்பருடைய அன்பை உணர்ந்தேன். அதே நேரத்தில் ஜீவனுள்ள தேவனுடைய வல்லமையை நான் அனுபவித்து விசுவாசத்தில் வளர்ந்தேன்.

ஜூலை 2014ல் எனது வலது கை நரம்பில் வைரஸ் கிருமி தொற்று ஏற்பட்டது. ஆனால் பெண்கள் பணித்தளத்தின் வழிநடத்தும் போதகர் உயர்திரு. ஹீசன் லீ அவர்கள் ஜெபித்த அடுத்த நாளே கொப்பளமெல்லாம் மறைந்தது; நான் முற்றிலும் சுகமானேன்!

தலைமை போதகரின் ஜெபத்தால் நான் (Cholinergic Urticarial) படைநோயிலிருந்தும் சுகம் பெற்றேன். இது உடற்பயிற்சி, குளியல், சூடான சுற்றுபுறத்தில் தங்கி இருத்தல் அல்லது உணர்ச்சி கிளர்ச்சியால் பொதுவாக வளரும். இது வந்ததிலிருந்து தூங்க முடியாமல் அரித்து கொண்டே இருந்தது. சூடான இடத்தில் நான் அரிப்பை உணர்ந்ததால் நான் வராண்டாவில் தூங்க நேர்ந்தது. இது முதலாவது எனது வலது கரத்தில் ஒரு இடத்தில் தான் வந்திருந்தது. ஆனால் அது பின்னர் மூன்று பகுதிகளுக்கு பரவியது. பின்னர் எனது கழுத்திலும் ஒன்று வந்தது.

எனது மாகாணப் போதகர் என்னை மான்மின் கோடை ஏகாந்தத்திற்கு ஆயத்தமாகும்படி சொன் னார். சொல்லப்பட்டபடி, நான் பொருத்தனை ஜெபம் ஏறெடுத்தப் பின்னர் இறுதியாக கோடை ஏகாந்தத்திற்கு சென்றேன். ஆகஸ்ட் 4, 2014ல், கருத்தரங்கின்போது நான் திருச்சபையில் பத்து வருடங்களுக்கு மேலாக பங்குப்பெற்று கொண்டி ருந்தாலும் சபை செல்வோராக தான் இருந்தேன் என்பதை அறிக்கை செய்தேன். தேவனுடைய ஆண்டவருடைய மேய்ப்பருடைய அன்பிற்காக நன்றி செலுத்தினேன். பின்னர் தலைமை போதக ருடைய ஜெபத்தை என் இருதயத்துடன் பெற்றுக் கொண்டேன். அடுத்த நாள் காலையில் எல்லா அறிகுறிகளும் மறைந்தன. நான் சுகம் பெற்றேன். றலேலூயா!

எனது படைநோய் நிலை நரம்பு மண்டலத்தில் ஏற்பட்ட அளவுகதிகமான வலியால் என்னில் உருவான சீரற்ற நிலையின் காரணத்தால் உண் டானது. இது அவர்களது சரீர அமைப்பில் மாற்றம் ஏற்படாத பட்சத்தில் அவர்கள் வாழ்க்கை முழுவதும் பாதிப்பை ஏற்படுத்தும். ஆனால் நான் தலைமை போதகருடைய ஜெபத்தால் சுகம் பெற்றேன். குழ –ந்தை பெற்ற பின் என்னை பாதித்த சிறுநீரை அடக்க முடியாத கோளாரிலிருந்தும் சுகம் பெற் றேன்.

இப்போது எனது கணவர் மற்றும் மகன் சேர்ந்து சபையில் பங்கு பெறுகின்றனர். மரித்துப்போன என் ஆத்துமாவையும் கடினமான என் இருதயத் தையும் உயிர்ப்பித்த தேவனுக்கு எல்லா நன்றி களையும் மகிமையையும் செலுத்துகிறேன்.



**அயல் தேசத்திலிருந்து ஓர் கடிதம்**

# "போதகர் டேசிக் கில் அவர்களது போதகர்களுக்கான கருத்தரங்கம் மற்றும் அற்புத சுகமளிக்கும் படைமுயற்சி கூட்டங்களில் நாங்கள் ஆசீர்வதிக்கப்பட்டோம்"

**உயர்திரு. அஜீஸ் மோர்கன், எகிப்து பெந்தேகோஸ்தே திருச்சபைகளின் தலைவர்**

அன்புள்ள அறிவர். ஜேராக் லீ அவர்களே,

எகிப்திலுள்ள எனது சபைக்கு நீங்கள் தரும் உதவி ஆதரவுக்காக நன்றி. கொரியாவில் உள்ள மான்மின் மத்திய திருச்சபையை எங்களது தாய் சபையாக கருதுகிறோம். நீங்கள் எகிப்திலும் வல்லமையான கிரியைகளை வெளிப்படுத்தும்படியாக நாங்கள் வாஞ்சித்துக்கொண்டு இருக்கிறோம். இஸ்ரவேலர்கள் எப்படி மோசையை தங்கள் விசுவாச தலைவனாக ஏற்றுக்கொண்டு அவனை பின்பற்றியதுபோல, நாங் களும் உம்மை நம்புகிறோம்.

டிசம்பர் 2014ல், போதகர் டேசிக் கில் அவர்களுடன் எங்களுக்கு போதகர்கள் கருத்தரங்கம் மற்றும் அற்புத சுகமளிக்கும் படைமுயற்சி கூட்டங்கள் நடந்தது. கருத்தரங்கில் போதகர். கில் அவர்கள் "சிலுவையின் செய்தியிலிருந்து" எடுக்கப்பட்ட ஏன் இயேசு கிறிஸ்து மட்டுமே நமது இரட்சகராய் இருக்கிறார் என்று செய்தியளித்தார். அதைக் கேட்டபின், மொகமத் அபேத் எல்காதர் என்ற பெயருள்ள ஒரு முஸ்லீம் "'இயேசு இரட்சகர் என்று நான் கேட்டது இதுவே முதல் முறை.' முஸ்லீம்கள் இயேசு தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்று கூறுவர். ஆனால் இன்று செய்தியின் மூலமாக இயேசு ஒரே பேறான தேவனுடைய குமாரன் நமக்காக இரட்சகரானார் என்று அறிந்து கொண்டேன். முதன் முதலாக இரட்சிப்பின் பாதையில் என் கால்களை வைக்கிறேன். இயேசுவே எனது ஒரே இரட்சகர் என்று பிரகடனப்படுத்த விரும்புகி றேன்" என்றார்.

போதகர் கில் அவர்கள் அறிவர்.ஜேராக் லீ அவர்கள் ஜெபித்ததான வல்லமையின் கைக்குட்டையுடன் வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்தபோது (அப் 19:11–12) மக்கள் பலர் அவர்களது வியாதிகளிலிருந்து விடுதலையாயினர். அலிசா குடல் ஊத்த நோயிலிருந்து போதகர் மாக்தி சர்க்கரை நோயிலிருந்து சுகமானார். கிரெகெஸ் அயேத் தண்டுவட கோளாரிலிருந்து, ஹானான் ஏசெத் மற்றும் தோயுரியா அசெஸ் மூட்டு முடக்கு வாதத்திலிருந்து, சானிரா சாமி மஞ்சள் காமாலையிலிருந்து, அசெஸ் ஹானா இருதய நோயிலிருந்து, சாமியா சமேர் சிறுநீரக கோளாரிலிருந்து, மோவிதா மேகாலி மையோபியாவிலிருந்தும் சுகம் பெற்றனர். ஹலேலூயா!









▶ போதகர் டேசிக் கில்–ளுடன் எகிப்தில் போதகர் கருத்தரங்கில் மற்றும் அற்புத சுகமளிக்கும் படைமுயற்சி கூட்டங்களில் கைக்குட்டை ஜெபத்தின் மூலமாக மக்கள் பலர் தங்கள் வியாதிகளிலிருந்து குணமடைந்து கிறிஸ்தவர்களாக மாறினர்.

GCN
Global Christian Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam,
Chennai -600 049, PH: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS
Manmin International Seminary
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam,
Chennai -600 049, PH: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street,
Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: manminnewsasia@gmail.com

